# ‘புதிய விஸ்வகர்மாக்கள்’: சாதியும், சமகால யாழ்ப்பாணத்தில் பாரம்பரியக் கலைப்பயில்வும்

**பா.அகிலன்**, சிரேஸ்ட்ட விரிவுரையாளர், நுண்கலைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்.

சிற்ப சாஸ்திர மரபின்படி விஸ்வகர்மா என்பவர் படைப்புச் செயற்பாட்டில் அதியுயர் சக்தியாகவும் தச்சர்கள், கன்னார்கள், பொற்கொல்லர்கள், வார்ப்புச் சிற்பிகள், கற் சிற்பிகள் முதலியோரை உள்ளடக்கிய விஸ்வ கர்ம குலத்தினது தலையாய கடவுளாகவும் கொள்ளப்படுகிறார். ஏனைய தென்னிந்திய பண்பாட்டுப் பிராந்தியங்களைப் போலவே யாழ்ப்பாணத்திலும் பாரம்பரிய கலைப்பயில்வு என்பது விஸ்வகர்ம சமூகத்துடனேயே பல நூற்றாண்டுகளாக தொடர்புபட்டுள்ளது.

ஆனால் இந்தப் பாரம்பரிய கலைப்பயில்வானது வரலாற்றுக் காலங்களுடாக பல்வேறு மாற்றங்களைப் பெற்று வந்துள்ளது. மேற்படி மாற்றங்கள் புதிய தொகுதி விஸ்வகர்மாக்களை அல்லது ‘மாற்றப்பட்ட விஸ்வகர்மாக்களை’ (converted Visvakarmas) உருவாக்கியுள்ளன. ஆனால் இந்த புதிய விஸ்வகர்மாக்கள், பாரம்பரியமான விஸ்வகர்மச் சமூகத்தோடு எவ்வித உரிமைத் தொடர்பும் அற்றவர்கள்.

இந்த ஆய்வுக்கட்டுரை மேற்படி மாற்றங்களின் சமூக வரலாற்று சூழமைவினை யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சில ஸ்தபிகள் குடும்பங்களை முன்வைத்து ஆராய்கிறது.

திறவுச் சொற்கள்: விஸ்வகர்மாக்கள், சிற்ப சாஸ்திரம், கலைப்பயில்வு

## New Viswakarmas : Caste and traditional art practice in contemporary Jaffna

According to the Silpa sastra tradition Viswakarma is the supreme power of creation and presiding deity of all the branches of the Viswakarma kulam (caste) includes carpenters, blacksmiths, goldsmiths, metal casters and stone masons. The traditional art practice of Jaffna is also connected with the Viswakarma community as common in other South Indian cultural zones.

But these traditional art practices were changed through the years of history. The changes have occurred due to many reasons of socio historical changes in the visvakarma community as well as in the Tamil community in general. These changes produced the new set of Viswakarmas or 'converted Visvakarmas'. These new Vishvakarmas haven't any belongings with the traditional Visvakarma communities.

This paper explores the socio historical context of these changes by reading of the particular Sthapathi families in Jaffna peninsula.